# பாராளுமன்ற செய்தி

செய்தி மடல்

06வது தொகுதி

டிசம்பர் 2020




01 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நிகழ்நிலை கலந்துரையாடல்

02 மாவட்ட நீதிமன்றங்களில் தீர்க்கப்படாத 231,506 வழக்குகள்

03 இலங்கையில் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்த பாதுகாப்புத் தரப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஒன்றிணைந்த வேலைத்திட்டம்

04 பாராளுமன்ற சபையின் அறியப்படாத பகுதி சபை ஆவண அலுவலகம்

05 விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுக்கும் நோக்கில் நடைமுறை

08 வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் புதிய தேசிய நியதிச்சட்டம்

10 2018ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்கள வருமானத்தில் 1.3 ட்ரில்லியன் ரூபா பற்றாக்குறை



தொடர்பாடல் திணைக்களம்

இலங்கை பாராளுமன்றம்






# பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நிகழ்நிலை கலந்துரையாடல்

பாராளுமன்றத்துக்குத் தலைமை தாங்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் நுட்பங்கள் தொடர்பான புரிதலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான நிகழ்நிலை கலந்துரையாடல் அண்மையில் பாராளுமன்ற வாளாகத்தில் நடைபெற்றது.

இலங்கை பாராளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பாராளுமன்றத்துக்குத் தலைமைத்தாங்கும் தவிசாளர் குழாமில் உள்ள உறுப்பினர்கள் இணையத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அவர்களும் பங்கேற்றிருந்த இந்தக் கலந்துரையாடலின் நோக்கம், பாராளுமன்றத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும்போது பயன்படுத்தக்கூடிய தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் மற்றும் உபகரணங்கள் குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தின் நடைமுறைகள் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்வதாகும்.

> “இந்தக் கலந்துரையாடலின் நோக்கம், பாராளுமன்றத்திற்கு தலைமைத்தாங்கும் உறுப்பினர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும்போது பயன்படுத்தக்கூடிய தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் மற்றும் உபகரணங்கள் குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தின் நடைமுறைகள் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்வதாகும்.”

பிரித்தானிய பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் கௌரவ டொன் ப்ரிமரோலோ மற்றும் பிரித்தானிய பாராளுமன்ற பணியாட்குழுவின் முன்னாள் உறுப்பினரான கௌரவ. அண்ட்ரூ கென்னன் உள்ளிட்டோர் இதன்போது இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தெளிவுப்படுத்தல்களை மேற்கொன்டனர்.

# பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் மற்றும் பணியாட்கள் தொகுதியின் பிரதானியாக குஷானி ரோஹணதீர நியமனம்



சட்டத்தரணி திருமதி. குஷானி ரோஹணதீர பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் மற்றும் பணியாட்கள் தொகுதியின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அவர்களின் பரிந்துரைக்கு அமைய, கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் மற்றும் பணியாட்கள் தொகுதியின் பிரதானியாக பணியாற்றிய நீல் இத்தவல அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திருமதி. குஷானி ரோஹணதீர நியமிக்கப்பட்டார்.

திருமதி. ரோஹணதீர 2012 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகமாக (நிர்வாகம்) பதவி வகித்ததுடன், 1999 ஆம் ஆண்டில் பாராளுமன்ற அதிகாரியாக இலங்கை பாராளுமன்ற சேவைக்கு இணைந்துகொண்டார்.

அம்பலாக்கொட தர்மாஷோக்க வித்தியாலயத்தின் புகழ்பெற்ற பழைய மாணவியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார். அதனை அடுத்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை இளமானிப்பட்டத்தை பூர்த்தி செய்த இவர் சட்டக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றி சட்டத்தரணியாக உயர்நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

# மாவட்ட நீதிமன்றங்களில் தீர்க்கப்படாத 231,506 வழக்குகள்



நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் படி நாட்டில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் விசாரிக்கப்படாத மற்றும் விசாரிக்கப்பட்டுவரும் வாக்குகளின் எண்ணிக்கை 231,506 ஆகும் என நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தகவல்களுக்கு அமைய இந்த வழக்குகளில் 01-05 வருடங்கள் விசாரிக்கப்பட்டுவரும் 49,801 வழக்குகளும், 05-10 வருடங்கள் விசாரிக்கப்பட்டுவரும் 20,586 வழக்குகளும், 10-15 வருடங்களாக விசாரிக்கப்பட்டுவரும் 8,947 வழக்குகளும், 15-20 வருடங்களாக விசாரிக்கப்பட்டுவரும் 3418 வழக்குகளும், 20-25 வருடங்களாக விசாரிக்கப்பட்டுவரும் 4620 வழக்குகளும் காணப்படுவது இங்கு வெளிப்பட்டது. இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் குறிப்பிடுகையில், மனுத் தாக்கல் செய்தல் மற்றும் வழக்குகளை விசாரணை செய்தல் என்பன இரண்டும் வேறுபட்ட செயற்பாடுகள் என்றார். இருந்தபோதும் கொவிட்-19 சவால் காரணமாக மூன்று மாதங்களாக வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லையனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்வாறான சூழ்நிலையிலும் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 70ற்கும் அதிகமான வழக்குகளுக்கான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன், நீதித்துறையின் சுயாதீனத் தன்மை தொடர்பில் சபையில் உறுதியளிப்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

செய்தி

# புதிய பொலிஸ்மா அதிபருக்கும் சபாநாயகருக்குமிடையில் சந்திப்பு





புதிய பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, இலங்கை பாராளுமன்றத்தில் கௌரவ. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சபாநாயகர், இலங்கை பொலிஸார் தேசிய பொறுப்பை நிறைவேற்ற புதிய பொலிஸ்மா அதிபர் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு, சபாநாயகர் புதிய பொலிஸ்மா அதிபருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டதோடு இலங்கை பொலிஸ்துறையை சிறந்த நிலைக்கு கொண்டு செல்லவும், மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இலங்கையின் 35 ஆவது பொலிஸ்மா அதிபராக பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.



# இலங்கையில் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்த பாதுகாப்புத் தரப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஒன்றிணைந்த வேலைத்திட்டம்

இலங்கையில் இடம்பெறுகின்ற காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சர் சமல் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்தார். இடம்பெற்றுவரும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு எதிராக வனஜீராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து கூட்டு நடவடிக்கையை முன்னெடுப்பர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புத் தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் சமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார். இக்குழுக் கூட்டத்தில் 30ற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.
இந்நாட்டில் அதிகரித்துள்ள மரம் வெட்டுதல், மண் அகழ்தல், சுரங்கங்களில் இரத்தினக்கல் அகழ்தல் போன்ற சுற்றுச்சூழல் பாதிப்புக்களை கட்டுப்படுத்த வரையறுக்கப்பட்ட பணியாட்தொகுதியே உள்ளமை போன்ற நடைமுறைக் காரணங்களால் வனப் பாதுகாப்புக்க பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பது நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேற்கொள்வதற்கு சிறந்ததாக அமையும் என வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வாரமொன்றில் மூன்று நாட்கள் வானத்தில் பறக்கவிடப்படும் விமானப் படையினரின் ட்ரோனர் விமானங்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் ஏற்கனவே கண்காணிக்கப்படுவதாக இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ன குறிப்பிட்டார்.

அமைச்சர் சீ.பி.ரத்னாயக்கவின் கோரிக்கைக்கு அமைய பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும், இருந்தாலும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

சிறப்புக் கட்டுரை

# பாராளுமன்ற சபையின் அறியப்படாத பகுதி
# சபை ஆவண அலுவலகம்



"ஒழுங்குப் பத்திரம் இன்றி பாராளுமன்ற சபை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது. பாராளுமன்ற அமர்வொன்றை நடத்துவதற்கு தேவையான ஆவணங்களை சபை ஆவண அலுவலகம் தயாரிக்க வேண்டும். அதனால் சபை ஆவண அலுவலகம் என்பது பாராளுமன்றத்தின் இதயம் போன்ற ஓர் இடம். இந்த இடம் இயங்காமல் பாராளுமன்ற நடவடிக்கைகள் முறையாக இடம்பெறாது. இதனால் எமக்கு பாரிய ஒரு பொறுப்பு உள்ளது". இவ்வாறு பாராளுமன்ற சபை ஆவண அலுவலக உதவிப் பணிப்பாளர் ஜனகாந்த சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் அனைத்து ஆவணங்களையும் ஒருங்கிணைப்பு செய்வதும் அதன் பொறுப்புகளை ஏற்பதும் சபை ஆவண அலுவலகமாகும். பாராளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கு பல்வேறு ஆவணங்கள் தேவைப்படுகின்றன. இவற்றை அரசியலமைப்பின் அதிகாரங்கள் மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய மும்மொழிகளிலும் தயாரித்து சபைக்கு வழங்க சபை ஆவண அலுவலகம் நடவடிக்கை எடுக்கின்றது.

பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம் அல்லது அதனுடன் தொடர்புடைய அனுபந்தம், ஒழுங்குப் பத்திரம், தினப்பணிகள், பாராளுமன்ற கூட்டறிக்கை ஆகியன சபை ஆவண அலுவலகம் தயாரிக்கும் பிரதான ஆவணங்களாகும். எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளுடன் தொடர்புடைய அனைத்து வினாக்கள், பிரேரணைகள், சட்ட மூலங்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு 3 - 4 மாதங்களுக்கு ஒருமுறை ஒழுங்குப் புத்தகத்தில் வெளியிடப்பட்டும். இது தொடர்பில் மேலதிக தகவல்களை சேர்ப்பதற்கு அதனுடன் தொடர்புடைய அனுபந்தம் தயாரிக்கப்படும். பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் ஒவ்வொரு தினத்துக்குமுரிய ஒழுங்குப் பத்திரம் தயாரிக்கப்படும். ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய சபையின் தினமொன்றுக்கான நடவடிக்கைகளின் ஒழுங்குமுறை தயாரிக்கப்படுகின்றதி.

"ஒழுங்குப் பத்திரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழுகளிலும் தயாரிக்கப்படுகின்றது. சில நாட்களில் மாலை 7.30 க்கு பின்னர் பாராளுமன்ற அமர்வு நிறைவுறுகின்றது. எந்த நேரத்தில் அமர்வு முடிந்தாலும் மறுநாள் அமர்வை நடத்துவதற்கு தேவையான ஒழுங்குப் பத்திரம் மற்றும் தேவையான ஆவணங்களை நாம் தயாரிக்க வேண்டும். நாம் இவற்றை உரிய நேரத்தில் மேற்கொள்ளாவிட்டால் மறுநாள் அமர்வை நடத்த முடியாமல் போகும். இதனால் நாம் இரவு நேரம் வரை இருந்து வேலைகளை முடித்துவிட்டு தான் வீடுகளுக்கு செல்கின்றோம். இது பாரிய பொறுப்பாகும்" என ஜனகாந்த அவர்கள் தெளிவுபடுத்தினார்.

"இங்கு திரைக்கு பின்னால் பல விடயங்கள் இடம்பெறுகின்றன. நாம் இந்த ஆவணங்களை தயாரித்து அச்சிடுவதற்கு இரவிலேயே அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு அனுப்புகின்றோம். இவை



திரு. எச்.இ ஜனகாந்த சில்வா
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

அனைத்தும் இரவிலேயே அச்சிடப்பட்டு அதிவேக அஞ்சலில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. காலையாகும் போது உறுப்பினர்களின் விலாசங்களுக்கு மற்றும் உரிய அமைச்சுகளுக்கு பிரதிகள் சென்றடைவதற்கு நாம் இவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றோம். அவ்வாறே ஏனைய பிரதிகளை காலை 7.30 மணிக்கு பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுகின்றன. இது ஒரு சிக்கலான செயற்பாடாகும்" அவர் இந்த சிக்கலான செயற்பாட்டை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் குறிப்பிட்டார்.

அதேபோன்று பாராளுமன்ற நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற அலுவல்களின் 15 விடயங்கள் தொடர்பான ஆவணங்களை தயாரிக்கும் பொறுப்பும் சபை ஆவண அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற அலுவல்களை தொடர்பில் சட்டரீதியாக செல்லுபடியாகும் இறுதி ஆவணமும் தயாரிக்கப்படுகின்றது. அது பாராளுமன்ற நடவடிக்கைகள் சட்டரீதியாக பதிவுசெய்யப்படும் அதாவது பாராளுமன்ற கூட்டறிக்கையை தயாரிக்கும் பொறுப்பையும் சபை ஆவண அலுவலகமே ஏற்றுள்ளது.

சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உறுப்பினர்களின் வரவு அவசியமானது. அனைத்து உறுப்பினர்களும் அவர்கள் பாராளுமன்றத்தில் பயன்படுத்தும் பெயர்கள், அமர்வு தினத்தில் உள்ள முகவரி, பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி போன்ற அடிப்படை தகவல்களை பேணுவதும் சபை ஆவண அலுவலகமாகும். அதேபோன்று உறுப்பினர்களின் சிரேஷ்டத்துவம் மற்றும் சிங்கள அரிச்சுவடிக்கு அமைய பெயர் பட்டியலை (Members' Information System) தயாரிப்பதும் சபை ஆவண அலுவலகமாகும். ஏனென்றால் உறுப்பினர்களின் இந்த தகவ்களை சரியான முறையில் பேணுவது மிகவும் முக்கியமாகும"என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பாராளுமன்ற அலுவல்களை பிழையின்றி மேற்கொள்வதற்கு சபாநாயகருக்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு மற்றும் செயலாளர் குழுவுக்கு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற சபை ஆவண அலுவலகம் முக்கியமான கடமையை ஆற்றிவருகின்றது.

**ஆசிரி ஹபுகொட**
***ஊடக அதிகாரி***
***தொடர்பாடல் திணைக்களம்***

செய்தி

# விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுக்கும் நோக்கில் நடைமுறை



அநியாய விலங்குப் படுகொலைகளை நிறுத்துவதற்கு தண்டனை சட்டக்கோவையில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசிங்க அவர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். விலங்குகள் கொல்லப்படுவது முன்னரைவிட தற்பொழுது அதிகரித்திருப்பதாகவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான முறையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜயந்த வீரசிங்க அவர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

சட்டத்தை இயற்றுவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டிருப்பதால், விலங்குகள் வேட்டையாடப்படுவதையும், படுகொலை செய்யப்படுவதையும் தடுக்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தங்களைத் துரிதப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் சி.பி.ரத்னாயக்க சுட்டிக்காட்டினார்.

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றைத் துரிதப்படுத்துவதன் அவசியம் குறித்தும் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. இந்த விடயம் தொடர்பிலும் குறித்த சட்டத் திருத்தத்தின் போது கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

செய்தி

# கடவத்தை முதல் மீரிகம வரையான அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானத்தின் மந்த கதி தொடர்பில் உடனடி அறிக்கை





அதிவேக நெடுஞ்சாலையில் கடவத்தை முதல் மீரிகம வரையிலான கட்டுமானப் பணிகள் மந்த கதியில் முன்னெடுக்கப்படுவதால் எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைய முடியாதிருப்பது தொடர்பில் அதிருப்தியை வெளிப்படுத்திய நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து, இது குறித்து உடனடியாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு நெடுஞ்சாலை அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலை அமைச்சு தொடர்பான ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இதற்கமைய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளை உடனடியாகத் துரிதப்படுத்துமாறு பணிப்புரை விடுத்த அமைச்சர், கட்டுமானப் பணிகளைப் பார்வையிட தன்னுடன் வருமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்ததுடன், இதற்கான திகதியொன்றை வழங்குவதாகவும் கூறினார்.

கட்டுமானப் பணிகள் மந்த கதியில் முன்னெடுக்கப்படுகின்றபோதும் இரண்டாவது கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் இக்கலந்துரையாடலில் வெளிப்பட்டது. உடனடியாக இந்தக் கொடுப்பனவை நிறுத்துமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார். உரிய நேரத்தில் முன்னெடுக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்கவேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஐரோட் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வீதிகளுக்கு பொருத்தமற்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவுசெய்யப்பட்டமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டு, குறிப்பிட்ட காலத்துக்குள் அத்திட்டங்களைப் பூர்த்திசெய்யாத ஒப்பந்தக்காரர்களுடனான ஒப்பந்தங்களைத் தடைசெய்து, அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார். அவ்வாறு பூர்த்திசெய்யப்படாத ஒப்பந்தங்களை முழுமையாகப் பூர்த்தி செய்யும் பொறுப்பை நெடுஞ்சாலைகள் அமைச்சின் பொறியியல் பிரிவுக்கு வழங்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து தலைமையில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும், நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சிறப்புக் கட்டுரை

# பாராளுமன்றத்தில் ஒரு நாளில் நடைபெறும் தினப்பணி தொடர்பான விமர்சனப்பார்வை









சட்ட உருவாக்க பணிகளில் இலங்கை பாராளுமன்றத்துக்கு மீயுயர் அதிகாரம் காணப்படுகிறது. மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களின் சட்டவாக்க பலம் செயற்படுத்தப்படுகின்றது. இதுவே பாராளுமன்றத்தில் பிரதான பணியாகும். பாராளுமன்ற நிலையியற் கட்டளையின்படி ஒவ்வொரு மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமையின் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும் மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடும். பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்தின்படி 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் பாராளுமன்ற அமர்வு முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5.30 மணிக்கு இடைநிறுத்தப்படும். பிற்பகல் 4.30 மணியிலிருந்து பிற்பகல் 5.30 வரை சபை ஒத்திவைப்பு வேளை மீதான விவாதம் நடைபெறும்.

நிலையியற் கட்டளை 22 இன்படி பொதுத்தேர்தல் ஒன்றின் பின்னரான முதலாவது அமர்வின் பாராளுமன்ற அலுவல்களின் ஒழுங்கு தரப்பட்டுள்ளது. அதன்படி, பாராளுமன்ற செயற்பாடுகள் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி பிரமாணம் அல்லது உறுதியுரையுடன் ஆரம்பமாகும். அதன்பின்னர், ஜனாதிபதியின் செய்திகள் சபாநாயகரினால் சபாமண்டபத்தில் அறிவிக்கப்படும். அதன்பின்னர் சபாநாயகரின் அறிவித்தல்கள் சபையில் அறிவிக்கப்படும்.

மேலும், வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு முன்னர் பத்திரங்கள் சமர்ப்பித்தல், குழுக்களின் அறிக்கைகளை சமர்ப்பித்தல் என்பனவும் நடைபெறும். அதன்பின்னர் சமூகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகளும் அமைச்சு சம்பந்தப்பட்ட கூற்றுக்கள் எடுத்துக்கொள்ளப்படும். அதன்பின்னர் தனிப்பட்ட விளக்கங்களும் சிறப்புரிமைக் கேள்விகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு பின்னர் முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகளும் எடுத்துக்கொள்ளப்படும். அதன்பின்னர் முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகளும் எடுத்துக்கொள்ளப்படும். அதனைத்தொடர்ந்து அனுதாப பிரேரணைகளும் பின்னர் பொது

அலுவல்களும் நடைபெறும். தினப்பணிகள் இரண்டு பிரிவாக நடைபெறுகின்றது.

பொது அலுவல்கள் தினப்பணிகளையும் பிரேரணைகளின் முன்னறிவித்தல்களையும் கொண்டிருக்கும். குறித்த ஒரு தினத்தில் பரிசீலனைக்கு எடுப்பதற்கு பாராளுமன்றம் பணித்த ஒரு சட்டமூலம், ஒழுங்குவிதி, தீர்மானம் அல்லது வேறு ஏதேனும் விடயம் அவ்வாறு நியமிக்கப்பட்ட தினத்திற்கு முன்னைய தினம் ஒன்றுக்கு பதிலீடு செய்யலாகாது. ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாளிலும் அரசாங்க அலுவல்கள் முன்னீடடைதல் வேண்டும். இது தொடர்பாக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 23 (4) இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் புதிய தேசிய நியதிச்சட்டம்



வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் புதிய தேசிய நியதிச்சட்டமொன்றை தயாரிப்பதாக போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே அண்மையில் இடம்பெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். அது தொடர்பில் ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் இணைந்து செய்யக்கூடிய வகையிலான புதிய தேசிய நியதிச்சட்டமொன்றை தயாரிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான புதிய தேசிய நியதிச்சட்டம் தொடர்பான பின்னணி ஆய்வு தற்பொழுது முடிவடைந்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். நாட்டிலுள்ள அனைத்து போக்குவரத்து சேவைகளையும் ஒழுங்குபடுத்தும் வகையில் புதிய வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளது. வாகனங்கள் பாதைகளில் ஓடுவதற்கு ஏற்றவையா என்பதை கண்டறிவதே வாகனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான புதிய தேசிய நியதிச்சட்டத்தின் பிரதான நோக்கமாகும் என்றார். நாடு பூராகவுமுள்ள முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு அடையாள அட்டை வழங்குவது பொருத்தமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே இதன்போது தெரிவித்ததுடன், அதுவும் புதிய தேசிய நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய பஸ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசு வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதாக தெரிவித்த அமைச்சர் காமினி லொக்குகே, தேர்ந்தெடுக்கப்பட்ட 10 டிப்போக்களை நவீனமயப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார். இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் 30க்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது



செய்தி

# சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைத்தவுடன் கொவிட் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய விமான நிலையங்கள் திறக்கப்படும்




வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவாக கொவிட் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைத்தவுடன் விமான நிலையங்களை திறக்க முடியும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடனும் அமைச்சர் கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, சந்திம வீரக்கொடி, பிரமித பண்டார தென்னக்கோன், தயான் கமகே உள்ளிட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.


கொவிட் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை வழங்க 80 சுற்றுலா சேவை வழங்கும் நிலையங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுற்றூலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி கிமார்லி பெர்னாந்து சுட்டிக்காட்டினார்.

கொவிட் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய சுற்றுலா சேவை வழங்கக் கூடிய ஹோட்டல்கள் மற்றும் சுற்றூலத்துறை நிறுவனங்கள் இதற்காக பதிவுசெய்ய முடியும் என்றும், சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் இணைந்து அவற்றின் தரத்தை ஆராய்ந்து அனுமதி வழங்க முடியும் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி தெரிவித்தார்.

பைசர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள கொவிட் தடுப்பூசியை அனுமதித்த முதலாவது நாடாக ஐக்கிய இராச்சியம் அறிவிக்கப்பட்டுள்ள பின்புலத்தில் எதிர்காலத்தில் இந்தத் தடுப்பூசி வெற்றியளித்தால் விமான நிலையங்களை விரைவில் திறக்க முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புத் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே சுட்டிக்காட்டியிருந்தார். இதற்குப் பதிலளித்த சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி, முதல் தடவையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களே சுற்றுலாத்துறைக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமித்துள்ளார் எனக் குறிப்பிட்டார். முன்னேறிவரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையின் முதலாவது கையடக்கத் தொலைபேசி செயலியொன்று (Mobile App) தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். குறித்த செயலியில் உள்ள அவசர பொத்தானை அழுத்துவதன் ஊடாக சுற்றுலா பயணிகள் தாம் இருக்கும் பகுதியின் விபரத்தை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துடன் பகிர்ந்துகொள்ள முடியும் எனவும், இதன் முதலாவது பதிப்பு 2021ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டில் பயன்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.
சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் வடக்கு, கிழக்கில் திட்டவரைபுகள் தயாரிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார். சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய தலைமன்னாரிலிருந்து கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறும் அவர் முன்மொழிந்தார்.

இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்புபட்ட 4956 புதிய சுற்றுலா தலங்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், இதனை ஊக்குவிக்க இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடியிருப்பதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவி சுட்டிக்காட்டினார்.

முதல்தர வகுப்பு பயணிகள் மற்றும் வர்த்தக வகுப்புப் பயணிகளுக்காக விமான நிலையத்தில் விசேடமான இரண்டு வசதிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டதும் இவை இயங்கும் என்றும் விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.








# 2018ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்கள வருமானத்தில் 1.3 ட்ரில்லியன் ரூபா பற்றாக்குறை

2018ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானத்தில் 1.3 ட்ரில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் (கோபா) கூட்டத்தில் புலப்பட்டது. வருமான பற்றாக்குறையில் பெரும்பகுதியானவை அரசாங்க நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டியவை என்றும், இவற்றில் சில நிறுவனங்கள் நிலுவைகளைச் செலுத்தக்கூடிய நிதி நிலைமையில் இல்லையென்றும் சுயாதீன சபை தீர்மானித்திருப்பதாகவும் உள்நாட்டு வரித் திணைக்களத்தின்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி, இந்த நிறுவனங்கள் குறித்து முழு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை வலியுறுத்தியது.

இந்த வருமானப் பற்றாக்குறைக்கு மற்றுமொரு காரணம் 3 பில்லியன் ரூபா பெறுமதியான 8060 மறுக்கப்பட்ட காசோலைகளே என கணக்காய்வாளர் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது. இதுதொடர்பில் ஏற்கனவே 65 வரி செலுத்துனர்களின் விபரங்கள் உள்ளடக்கிய கறுப்புப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள், கோபா குழுவிடம் தெரிவித்தனர்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு முன்னிலையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அழைக்கப்பட்டிருந்தது. இதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் சி.பி.ஜே. சிறிவர்த்தன மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

2017ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் RAMIS என அழைக்கப்படும் ஒன்லைன் முறையொன்றை ஆரம்பித்திருப்பதாகவும், இதன் ஊடாக வரி சேகரிப்பை வினைத்திறனாக மேற்கொள்ள முடியும் என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த பொறிமுறை 4 பில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்டபோதும் ஒவ்வொரு முறையும் வரி திருத்தங்கள் செய்யும்போதும் ரமிஸ் முறையில் குறித்த மாற்றங்களை மேற்கொள்ள 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டிருப்பது பிரச்சினைக்குரியது என கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டியிருந்தனர். எனவே, நிறுவனத்துடன் ஒரு முறை பணம் செலுத்தும் வழிமுறைக்கு வரி திருத்தங்கள் தொடர்பான ஒப்பந்தம் வர வேண்டும் என்று அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பரிந்துரைத்தார்.

எனினும், வரி செலுத்துனர்கள் மற்றும் வரி அறவீட்டாளர்களின் சௌகரியத்தைக் கருத்தில் கொண்டு ஐந்து வருடங்களுக்கு மாறாத வரிக் கொள்கையொன்று வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக முன்மொழியப்பட்டிருப்பதாக திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல தெரிவித்தார்.

கொவிட் காரணமாக வரையறைகள் காணப்பட்டபோதும் ஒன்லைன் முறைமையைப் பயன்படுத்தி உள்நாட்டு வரி வருவையை அதிகரிக்க முடிந்திருப்பதாக அத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சி.பி.ஜே.சிறிவர்தன குறிப்பிட்டார். தற்பொழுது வரி செலுத்துபவர்களில் 12 வீதமானவர்கள் மாத்திரமே ஒன்லைன் முறைமையைப் பயன்படுத்துவதாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்குப் பதிலளித்த, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். நிகழ்நிலை முறையின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் பெருநிறுவனத் துறையினர் இதனைப் பயன்படுத்தி வரியைச் செலுத்துவது இந்த வருட வரவுசெலவுத்திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டிருப்பதாக திறைசேரியின் செயலாளர் தெரிவித்தார். எனினும், இந்நாட்டில் 30 வீதமான வரி வசூலிக்கப்படுவதில்லையென்ற பொதுவானதொரு கருத்து காணப்படுகிறது என்ற கோபா குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரனவின் நிலைப்பாட்டுடன் அதிகாரிகள் இணங்கியிருந்தனர்.

இலங்கையில் பாரிய அளவில் வரிசெலுத்தும் 2,192 பேர் இருப்பதாகவும், அவர்களில் 532 பேர் வரி வருவாயில் 70.2% செலுத்துவதற்கு பங்களிக்கின்றனர்.
இந்த கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அலகியவண்ண, துமிந்த திஸாநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, குணபால ரத்னசேகர, வீரசுமண வீரசிங்ஹ, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, அஜித் ராஜபக்ஷ, எஸ்.சிறிதரன் மற்றும் கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.



# "மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு" பதிலாக "மொத்த தேசிய மகிழ்ச்சியை" தேடும் அண்டைய நாடான பூட்டான்



உலகில் அதிக சனத்தொகை கொண்ட சீனா மற்றும் இந்தியாவுக்கு எல்லையில் அமைந்துள்ள பூட்டான், தெற்காசிய வலயத்தில் உள்ள எமது அண்டைய நாடாகும். வெளி உலகத்துடன் வரையறுக்கப்பட்ட தொடர்புகளையே பேணும் பூட்டான் மக்கள் மிகவும் எளிமையான ஒரு வாழ்க்கையையே வாழ்கின்றனர். அதேபோன்று பூட்டான் இராஜ்ஜியம், அந்நாட்டு அரசு மற்றும் மக்களின் பிரதான குறிக்கோள் சுற்றுச்சூழலை பாதுகாப்பதாகும்.

சூழல் பாதுகாப்பு பூட்டானின் மிகவும் பிரதானமான அரசியல் கொள்கையாகும். அந்நாட்டின் அரசியலமைப்பின் ஊடாகவும் நாட்டின் பூமியின் 60% காடுகளால் சூழப்பட்டு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதுடன், தற்பொழுது பூட்டானின் காடுகள் 72% ஆக காணப்படுகின்றது. அந்நாட்டின் காடுகளை பாதுகாக்கும் நோக்கில் தற்பொழுது பூட்டானில் தடை செய்யப்பட்டுள்ள தொழிற்துறையாக பலகை ஏற்றுமதியை குறிப்பிடலாம்.

பூட்டானின் ஜிக்மே கேசர் நாம்கியல் வாங்சுக் அரசன் மற்றும் அவரது மனைவி ஜெட்சுன் பெமா ராணியின் இளவரசர்களின் பிறப்பின் மகிழ்ச்சியின் நிமித்தம் அந்நாட்டின் 82,000 பேர் கொண்ட அரச குடும்பம் ஒரு மரம் வீதம் நட்டு சுற்றுச்சூழல் மீதான நட்பை வெளிக்காட்டினர். இது ஒரு நாடாக, ஆட்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் சூழல் பாதுகாப்பிற்கு வழங்கும் ஆதரவை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறான முயற்சியொன்றின் ஊடாக சூழல் பாதுகாப்புக்காக அர்பணித்துள்ள பூட்டான், உலகிலுள்ள ஒரேயொரு எதிர்மறை காபன் அளவு கொண்ட நாடாக ஏனைய அனைத்து நாடுகள் மற்றும் உலக பிரபலங்களுக்கு அப்பால் முழு உலகுக்கும் முன்னுதாரணமாக எழுந்து நிற்கின்றது. புதைபடிவ எரிபொருள்கள் (Fossil Fuels) மற்றும் காடழிப்பு என்பவற்றினால் பூகோள வளிமண்டலத்துக்கு சேரும் ஒட்சிசனின் அளவு குறைவதும், காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதால் பச்சை வீட்டு பாதுகாப்பு வரம்பு மீறி சென்றுள்ளது. அதனால் முழு உலகிலுமுள்ள உயிரியல் கட்டமைப்புக்கு ஏற்படுத்தப்படும் தாக்கம் தற்காலத்தில் எழுந்துள்ள பிரதான சிக்கலாகும்.

வளிமண்டலத்துக்கு வெளியிடப்படும் காபனீரொட்சைட் அளவையும், வளிமண்டலத்தினால் உறிஞ்சப்படும் காபனீரொட்சைட் அளவையும் அடிப்படியாக கொண்ட காபன் தடம் (Carbon Footprint) எண்ணக்கருவில் பூட்டான் தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகளும் நிகர் காபன் வெளியீடு (Net Carbon Emitters) எனப்படும் நேர்மறை காபன் நாடுகளாகும்.
எல்லா நாடுகளையும் தண்டி பூட்டான் எவ்வாறு எதிர்மறை காபன் அளவு கொண்ட நாடாக மாறியது என்பதை தெளிவூட்டும் வகையில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் டிஷேரிங் டொப்கே டெட் டாக் (Ted Talk) உடன் இணைந்து குறிப்பிடுகையில், "எமது நாட்டில் வருடாந்தம் 2.2 மில்லியன்

டொன் காபனீரொட்சைட் வெளியிடப்படுகின்றது. எனினும் எமது நாட்டின் காடுகள் அது போன்ற மூன்று மடங்கை மீண்டும் பெற்றுத்தருகின்றது. அதனால் பூட்டான் என்பது வருடாந்தம் 6 மில்லியன் டொன்களுக்கும் அதிகம் காபனீரொட்சைட்டை உறிஞ்சும் நாடாகும். அதே போன்று பூட்டான், வேகமாக ஓடும் நதிகளின் மூலம் உருவாக்கும் புதுப்பிக்கத்தக்க மின்வலுவை ஏற்றுமதி செய்கின்றது. அதனால் பூட்டான் ஏற்றுமதி செய்யும் தூய சக்தி எமக்கு அருகில் உள்ள சுமார் 6 மில்லியன் டொன் காபனீரொட்சைட்டை சமநிலைப்படுத்துகின்றது. 2020 ஆம் ஆண்டில் நாம் ஏற்றுமதி செய்ய திட்டமிட்டிருந்த மின்சக்தியின் அளவை எடுத்துக்கொண்டால், சமநிலைப்படுத்தப்படும் காபனீரொட்சைட் அளவு சுமார் 17 மில்லியன் டொன்களாகும். காலம் செல்லச்செல்ல எம்மால் ஏற்றுமதி செய்யப்படும் தூய காபன் சக்தி வருடாந்தம் சுமார் 50 மில்லியன் டொன் காபனீரொட்சைட்டை சமநிலைப்படுத்தும். இது நிவ்யோர்க் நகரம் ஒருவரிடத்தில் உருவாக்கும் காபனீரொட்சைட் அளவை விடவும் அதிகமானதாகும். எனவே, நாம் உள்நாட்டில் காபனை உறிஞ்சும் அதேவேளை நாட்டுக்கு வெளியே காபனை சமநிலைப்படுத்துகின்றோம்". என தெரிவித்தார்.

பூட்டான் தனது வெற்றியை அளவிடுவதற்கு "மொத்த உள்நாட்டு உற்பத்தி" (GDP) எனும் அளவீட்டுக்கு பதிலாக "மொத்த தேசிய மகிழ்ச்சி" (GNH) எனும் அளவீட்டை பயன்படுத்துவது சிறப்பம்சமாகும். இந்த முறைமையை அறிமுகப்படுத்துவதன் பிரதான நோக்கம், பூட்டான் மக்களின் மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை சூழல் ரீதியாக, சமூக ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்காகும். இந்த எண்ணக்கரு 1972 ஆம் ஆண்டு அப்போதைய பூட்டான் ஜிக்மே சிங்கே வாங்சுக் (Jigme Singye Wangchuck) அரசனால் பூட்டானில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுபோன்ற சிறிய நாடான பூட்டானின் தூண்டுதலை பெற்று எதிர்வரும் ஆண்டுகளில் காபன் அளவு குறைந்த நாடுகளுள் வருவதற்கு கைகோர்த்துள்ள நாடுகளில் சீனா, பின்லாந்து, நியூசிலாந்து, ஜப்பான், பிரித்தானியா, டென்மார்க் போன்ற நாடுகள் காணப்படுவதுடன் எதிர்காலத்துக்காக சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பாதைகள் திறக்கப்படும் என்பது நிச்சயமாகும்.

**மாதவி ரங்கேபண்டார,**
***ஊடக அதிகாரி***
***தொடர்பாடல் திணைக்களம்***

செய்தி

# அனைத்து அரசாங்க நிறுவனங்களும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்க கோப் குழு பரிந்துரை




அனைத்து அரசாங்க நிறுவனங்களும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமது வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கோப் குழுவின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்திருப்பதுடன், ஒவ்வொரு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்களும் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடிய வகையில் வருடாந்த அறிக்கைகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனிசமான அரசாங்க நிறுவனங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமது வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லையென்பது கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி கூடிய கோப் குழுக் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.

இதன் காரணமாக பாராளுமன்றத்துக்குக் கிடைக்கும் பெரும்பாலான வருடாந்த அறிக்கைகளில் காலாவதியான தகவல்களே உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான அறிக்கையின் நிலைமைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்பதே கோப் குழுவின் அவதானமாகவும் இருந்தது.

# சபா மண்டபத்தின் அக்கிராசனம் சபாநாயகரின் ஆசனம்



பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் பிரதான செயற்பாடாக சபாநாயகரை தெரிவு செய்தல் இடம்பெறுகிறது. அரசியலமைப்பின்படி சபாநாயகருக்கு பிரதான ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பிரதானமானவர் என்ற வகையில் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க சபாநாயகருக்கு விசேட ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கிராசனம் அல்லது சபாநாயகரின் ஆசனம் என இது அழைக்கப்படுகின்றது.

ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டையில் புதிய பாராளுமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சபாமண்டபத்தில் புதிய சபாநாயகருக்கான ஆசனம் உருவாக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டு கொலன்னாவையிலுள்ள அரச தொழிற்சாலையில் இந்த ஆசனம் நிர்மாணிக்கப்பட்டது. ஐந்தரை அடி உயரமான இந்த ஆசனத்தின் பாதம் சிங்கத்தின் பாதத்தை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆசனத்தின் மேற்பகுதியில் இரண்டு அழகான பொன் சின்னங்கள் பொறிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் இருபுறமும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் சபாநாயகருக்கான இலச்சினையாக கருதப்படும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது.

சபையின் மேசையாகக் கருதப்படும் சபாநாயகரின் மேசை மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. இங்கு பிரதானமாக பாராளுமன்ற நிலையியற் கட்டளை, அரசியலமைப்பு, ஒழுங்குப்பத்திரம், ஒழுங்குப்புத்தகம் உள்ளடங்கலாக முக்கியமான பல ஆவணங்கள் மேசையில் வைக்கப்பட்டிருக்கும். மேலும் சபையில் ஏதேனும்





குழப்பங்கள் அல்லது அமைதியின்மை ஏற்படும்போது சபையை அமைதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் சம்மட்டி அம்மேசையின் வலது கை பக்கமாக வைக்கப்பட்டிருக்கும்.

பாராளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பிக்கப்படும்போது அல்லது விசேட நிகழ்வுகளின்போது மூலஸ்தானத்தில் ஜனாதிபதி அமர்வார். ஜனாதிபதி அமர்வதற்கான விசேட ஆசனம் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. அவ்வாசனம் சபாநாயகரின் ஆசனம் போன்றே காணப்படும். ஆனால் சபாநாயகரின் ஆசனத்தில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அமரும் ஆசனத்தின் உச்சியில் ஜனாதிபதிக்குரிய விசேட இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கும்.

ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியான அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் இலச்சினையான தூய்மையை குறிக்கும் வெள்ளை தாமரை மலர் ஆசனத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பாராளுமன்றத்தின் மூலாசனத்தில் வீற்றிருக்கும்போதான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த ஆசனம் இடப்படும்.

**எஸ். ஜெயபிரகாஷ்**
**பொதுச்சேவை ஒருங்கிணைப்பு அதிகாரி**
**தொடர்பாடல் திணைக்களம்**





செய்தி

# ஏழு அமைச்சுக்களின் செயலாளர்கள், தூதரக அதிகாரிகளின் நியமனத்துக்கு உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி





ஏழு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி அனில் ஜாசிங்ஹவும் உள்ளடங்குகின்றார்.

நீர் வழங்கல் அமைச்சின் செயலாளராக கலாநிதி பிரியத்பந்து விக்ரம, உயர் கல்வி அமைச்சின் செயலாளராக கபில பெரேரா, நீதி அமைச்சின் செயலாளராக எம்.எம்.பி.கே. மாயாதுன்ன, வெளிநாட்டு அமைச்சின் செயலாளராக பேராசிரியர் அத்மிரால் ஜயநாத் கொலம்பகே, பெருந்தோட்ட அமைச்சின் செயலாளராக ரவீந்திர ஹேவாவிதாரன, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளராக யூ.டி.சி. ஜயலால் ஆகியோரை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கட்டார் ராஜ்ஜியத்துக்கான இலங்கையின் புதிய தூதுவராக எம். மொஹமட் அவர்களை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தீர்ப்புக்களை சிங்கள மொழியில் வழங்குவது தொடர்பில் அரசு அவதானம்



உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தீர்ப்புக்களை சிங்கள மொழியில் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன வாய்மூல விடைக்காக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் வழங்கு விசாரணைகளில் ஏற்கனவே கால தாமதம் காணப்படுவதாகவும், இந்த நிலைமை மேலும் மோசமடையாத வகையில் இவ்விவகாரம் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறப்புக் கட்டுரை

# இடதுசாரி இருக்கையை பாதுகாத்த குசும்சிறி குணவர்தன



டொன் டேவிட் அமரசிங்க மற்றும் சோ.ஃபி நோனா ஆகியோருக்கு 1912ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி தங்காலை மெதகெட்டிய கிராமத்தில் பிறந்த குசும்சிறி அமரசிங்க அவர்கள், இராகுல மகா வித்தியாலயம், மாத்தறை சாந்த மரியா கல்லூரி மற்றும் கொழும்பு மியூசியஸ் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். 1939ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி, "சோசலிசத்தின் தந்தை" என்று அழைக்கப்படுபவரும், இலங்கைக்கு ட்ரொக்சியத்தை அறிமுகப்படுத்தியவரும் "பொரலுகொட சிங்கம்" என அழைக்கப்படும் டொன் பிலிப் ரூபசிங்க குணவர்தன என்பவரை மணந்தார்.

மேலும், அவர் சூரியமலர் இயக்கத்தில் சேவையாற்றியதோடு, பின்னர் லங்கா சம சமாஜ கட்சியில் இணைந்தார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தின் போது அவரது கணவர் இலங்கைக் காவலில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதோடு 1943ஆம் ஆண்டு மும்பையில் கைது செய்யப்பட்டுப் பின்னர் பல மாதங்களுக்குப் பிறகு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். 1947ஆம் ஆண்டில் நடந்த முதல் பாராளுமன்றத் தேர்தலில் அவிஸ்ஸாவலை தேர்தல் தொகுதியில் 17,598 வாக்குகளைப் பெற்று அவரது கணவர் பிலிப் குணவர்தன லங்கா சம சமாஜ கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், சவுத் வெஸ்டன் பேருந்து கம்பெனி லிமிடெட் ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்குத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்ட பிலிப் குணவர்தன அவர்கள் 194ஆம் ஆண்டில் நடந்த பொது வேலைநிறுத்தம் தொடர்பாக அவருக்கு மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது, மேலும்




குசும்சிறி குணவர்தன அவிஸ்ஸாவலை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டப் பின்னர் கொழும்பு கச்சேரிக்கு பிரவேசித்தபோது

அவர் குறித்த குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்டதற்காக 1948ஆம் ஆண்டு தேர்தல் மனுவினடிப்படையில் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பல வருடங்களுக்குப் பின்னர் பிலிப் குணவர்தன அவர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமையால் அவருக்கு பதிலாக அவரது மனைவி குசும்சிறி குணவர்தன 1948ஆம் ஆண்டு வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டதன் மூலம் இடைத்தேர்தல் ஆரம்பமாகியது. குறித்த இடைத்தேர்தலில் வெற்றியீட்டியதன் மூலம் இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது பெண் பாராளுமன்ற உறுப்பினரானார்.

புரட்சிகர இலங்கை சோசலிஸ கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அவர், 1952ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிப் பெற்றுத் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார். பின்னர் அவர் அவிஸ்ஸாவலை தேர்தல் தொகுதியிலிருந்து வெளியேறி, 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கிரியெல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். அதன்பின்னர் 1960ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தனக்கான இடத்தைப் பெறத் தவறிவிட்டார்.

1957ஆம் ஆண்டில், இலண்டனில் நடந்த பொதுநலவாய பாராளுமன்ற அமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய இவர் பெண்கள் சமமாக நடத்தப்படல் தொடர்பாகவும், சிவில் சேவையில் பெண்களை இணைத்தல் குறித்தும், பாராளுமன்றத்தில் சிரேஷ்ட பதவிகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படுவது தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தினார். ஹன்சாட் அறிக்கையின்படி, பாராளுமன்றத்தில் சிங்கள மொழியில் பேசிய முதல் பெண்மணி இவராவார். அதேநேரத்தில் சிங்கள மொழியில் அவரது சரளத்தன்மை, சிங்கள மொழி பற்றிய அவரது அறிவு என்பன சிங்கள மொழி பேசும் பாராளுமன்ற உறுப்பினராக அவர் புகழ்ப் பெற்றதற்கும் ஒரு சான்றாகும்.

பிலிப் குணவர்தன மற்றும் குசும்சிறி குணவர்தன ஆகியோருக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர்.



*கணவர் பிலிப், மகன்களான இந்திக, பிரசன்ன, தினேஷ், கீதாஞ்சன மற்றும் மகள் லக்மாலி ஆகியோருடன் குசும்சிரி குணவர்தன*

பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவை உறுப்பினருமான இந்திக குணவர்தன, 2002ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை கொழும்பு நகரின் மேயராக இருந்த பிரசன்ன குணவர்தன, இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் இலங்கைப் பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திப் பாராளுமன்றத்திற்குத் தெரிவானவரும் தற்போது வெளியுறவு அமைச்சராகவும் சபை முதல்வராகவும் விளங்கும் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கீதாஞ்சன குணவர்தன மற்றும் அரச விருது பெற்ற இலக்கியவாதியும் மூத்த எழுத்தாளருமான லக்மலி குணவர்தன ஆகியோர் இவர்களின் பிள்ளைகளாவர். அதுமட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன தேசியப் பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்தில் நுழைந்து அடுத்த தலைமுறையின் பிரதிநிதியாகவும் விளங்குகின்றார்.

இவ்வாறு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தனதுத் தாயகத்திற்கு உறுதியோடு சேவையாற்றிய குசும்சிறி, 1986ஆம் ஆண்டு மே 30ஆம் திகதியன்று தனது எழுபத்தேலாவது வயதில் உயிர் நீத்தார்.

இளம் நாடாளுமன்ற உறுப்பினரான தமரா குமாரி இளங்கரத்னவின் அரசியல் வாழ்வு தொடர்பாக அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

**இஷாரா விக்ரமசிங்ஹ**
***பொதுச்சேவை அதிகாரி***
***இலங்கைப் பாராளுமன்றம்.***



# 2025 ஆம் ஆண்டாகும்போது மின்சாரத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய திட்டம்

2025ஆம் ஆண்டாகும்போது நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் மின் விநியோகத்தை அதிகரிப்பதற்கு மின்னுற்பத்தி நிலையங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் பல எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக மின்சக்தி அமைச்சர் டலஸ் அழஹப்பெரும பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

இதற்கமைய 300 மெகாவோட்ஸ் திறனைக் கொண்ட திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) மின்நிலையத்தை கெரவலப்பிட்டிய பகுதியில் அமைக்கவிருப்பதாகவும், இதற்கான பணிகள் அடுத்தமாதம் முதலாவது வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 300 மெகாவோட்ஸ் திறனைக் கொண்ட கெரவலப்பிட்டிய-2 மின்னிலையத்துக்காக காணியைப் பெறுவதற்காக கேள்விப்பத்திரம் கோருவதற்கான நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்படும் என்றும், எரிபொருள் விநியோகம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 2024ஆம் ஆண்டு இதன் வியாபார செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


கொழும்பைச் சுற்றியுள்ள 650 கொவோட்ஸ் திறனைக் கொண்ட அனல் மின்நிலையத்தை திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) மின்நிலையமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், களனிதிஸ்ஸ, கெரவலப்பிட்டிய மற்றும் சபுகஸ்கந்த போன்ற மின்னிலையங்கள் டீசல் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) மின்நிலையங்களாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

2025ஆம் ஆண்டாகும்போது 22500 ஜிகாவோட்ஸ் மணித்தியால மின்சாரங்கள் உற்பத்தி செய்யப்படும் என இலங்கை மின்சார சபையின் மதிப்பீடு செய்திருப்பதுடன், 2013 ஆண்டிலிருந்து இதுவரை தேசிய கட்டமைப்பில் பிரதான மின்நிலையம் எதுவும் இணைக்கப்படவில்லையென்றும் அமைச்சர் டலஸ் அலஹப்பெரும தெரிவித்தார்.

நுரைச்சோலை மின்னிலையத்தின் நான்காவது கட்டத்தை ஆரம்பிப்பதற்கு கடந்த பெப்ரவரி மாதம் அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதுடன், இதற்கு அமைய 300 மொகாவோட்ஸை உற்பத்தி செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.



# வெள்ளிக் கதவு



பாராளுமன்றச் சபாமண்டபத்திற்கான பிரதான கதவான இது செம்பு மற்றும் வெள்ளியால் உருவாக்கப்பட்டுள்ளதோடு இந்தக் கலைப்படைப்பு பிரபல சிற்பக் கலைஞர் டி. விமல் சுரேந்திர அவர்களினால் உருவாக்கப்பட்டதாகும். வெள்ளிக்கதவானது 12 அடி உயரம் 12 அடி நீளத்தையுடையதாகக் காணப்படுகின்றது. இலங்கை அரசியலமைப்பின் முன்னுரையினை முப்பரிமாண வடிவில் பண்டைய கல்வெட்டுகளின் பாணியைப் பின்பற்றி சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கதவினூடக இலங்கைப் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் அனைவரும் நிச்சயமாக அதன் பெருமையை உணர்வார்கள். வெள்ளிக் கதவின் வெளிப்புற எல்லைகள் கண்கவர் தாமரை மலர் வடிவங்கள் மற்றும் பண்டைய இலங்கையின் கலையை சித்தரிக்கும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கதவின் பின்புறத்தில் உள்ள அலங்கார வடிவமைப்பு பிரித்தானிய அருங்காட்சியகத்தில் ஓவியத்தால் ஈர்க்கப்பட்ட அற்புதமாக உள்ள ஓர் கலையாகும்.

**ரிஷ்மியா நூடான்**
***பொதுச்சேவை அதிகாரி***
***இலங்கைப் பாராளுமன்றம்.***


## ஆசிரியர் குழாம்

*ஆலோசனை*

திரு. தம்மிக தஸநாயக்க (பாராளுமன்ற செயலாளர் நாயகம்)
திருமதி. குஷானி ரோஹனதீர (பிரதிச் செயலாளர் நாயகம், பணியாட்தொகுதி பிரதானி)
திரு. டிகிரி கே.ஜயதிலக (உதவிச் செயலாளர் நாயகம்)

எண்ணக்கரு மற்றும் வழிகாட்டல்

திரு. ஷான் விஜேதுங்க

*தொகுப்பு*

புத்தினி ராமநாயக்க
எதிரிவீர குணசேகர
நிம்மி ஹாத்தியல்தெனிய

*மொழிபெயர்ப்பு*

எம்.பிரசாத்
ஏ.ஜீ.எம்.எம்.நுஷ்கி
பா.ருத்ரகுமார்

*புகைப்படம்*

நுவான் துமிந்த

*பக்கவடிவமைப்பு*

இஷாரா விக்ரமசிங்ஹ

*இணையம் ஊடாக விநியோகம்*

ஏ.ஜீ.எம்.எம்.நுஷ்கி



**எச்.ஈ. ஜனகாந்த சில்வா**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் சபை ஆவண அலுவலகத்தின் (Table Office) தற்போதைய உதவிப் பணிப்பாளராக பணியாற்றும் எச்.ஈ. ஜனகந்த சில்வா அவர்கள் ஓர் எழுது வினைஞராக 1990 ஜனவரி மாதத்தில் பாராளுமன்ற சேவையில் இணைந்தார். ஜனகந்த சில்வா அவர்கள் ரோமின் ஏர்பன் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் தொடர்பில் பட்டம் பெற்றுள்ளார்.

அரசியலமைப்பு சட்டம் (Constitutional Law) மற்றும் பாராளுமன்ற முறைமைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் 2 டிப்ளோமாக்கள், பாராளுமன்ற சட்டவாக்கம் (Legislative Drafting) தொடர்பில் விசேட வதிவிட பயிற்சி நெறியொன்றையும் முறையாக இந்திய ICPS மற்றும் BPST ஆகிய நிறுவனங்களில் பெற்றுள்ளார்.

அதற்கு மேலதிகமாக சுவீடன், சீனா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் விசேட தொழில் ரீதியான பயிற்சி நெறிகளில் பங்கேற்று 31 வருட பாராளுமன்ற சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஜனகந்த சில்வா அவர்கள் அதில் 24 வருடங்கள் இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தில் பணியாற்றியுள்ளமை சிறப்பம்சமாகும்.



**திருமதி சரோஜினி ரம்யலதா குணரத்ன**
பிரதிப் பணிப்பாளர்
நிர்வாக திணைக்களம்

பம்பலபிட்டிய லிண்ட்ஸே கல்லூரி மற்றும் கொழும்பு விஷாகா கல்லூரியில் ஆரம்ப கல்வியை பெற்றுள்ள திருமதி சரோஜினி ரம்யலதா குணரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் விசேட பட்டப்படிப்பை பெற்றுள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி பாராளுமன்ற அதிகாரியாக சேவையில் இணைந்த அவர் தாபன அலுவலகம், கோப் மற்றும் கோபா அலுவலகம், நிதி, கணக்குகள் அலுவலகத்திலும் பணியாற்றியுள்ளார்.

தற்பொழுது இலங்கை பாராளுமன்ற நிர்வாக திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றி வரும் அவரது பாராளுமன்ற சேவைக்கலாம் சுமார் 34 வருடங்களாகும். வெளிநாட்டு பயிற்சிகளிலும் அவர் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**சி. கலன்சூரிய**
உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம்
மனித வள அபிவிருத்தி அலுவலகம்

மதுகம ஆனந்த சாஸ்த்ரால தேசிய பாடசாலை மற்றும் காலி மஹிந்த கல்லூரியில் கல்வி பயின்றுள்ள சி. கலன்சூரிய அவர்கள் 1983.04.04 ஆம் திகதி பாராளுமன்ற பணியாளராக இணைந்துகொண்டார்.


பாராளுமன்ற நிர்வாகம் மற்றும் சட்டவாக்க சேவைகள் திணைக்களங்களின் சுமார் 38 வருடங்கள் பல்வேறு பதவிகளில் வர பணியாற்றியுள்ளார். 2006.07.03 ஆம் திகதி உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு பதவி உயர்வு பெற்ற கலன்ஸூரிய அவர்கள் தற்பொழுது மனித வள அபிவிருத்தி அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்.

அவுஸ்திரேலியா, மலேசியா,சிங்கப்பூர், இந்தியா, ஜப்பான், மாலைதீவு மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் பாராளுமன்றங்களில் பயிற்சி நெறிகளிலும் அவர் கலந்துகொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

# புகைப்படத் தொகுப்பு

## நிலைபேறான நாட்டுக்கு - சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்








## சர்வதேச உறவுகளைப் பலப்படுத்தும் சபாநாயகர்







## அரசியலில் நமது பெண்களுக்கு சம வாய்ப்புகளும் சம உரிமையும் உள்ளதா?







தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல் : +94 11 2777227

Parliament of Sri Lanka
@ParliamentLK
@slparliament
Parliament of Sri Lanka